திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களின் அறிவிப்பு திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட தனித் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தனித் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி *30, 130* மற்றும் *132* ஆகியவற்றைத் தளர்த்தி, சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.*45, 46, 47* மற்றும் *48/1995* ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.